1987 நவம்பர் 18]

விடை—

சடையம்பட்டி கிராமத்தை, ஆலம்பட்டி-வடமதுரை பிரதான சாலையுடன் இணைக்கும் இணைப்பு சாலையின் இருகரைகளும் வலுவில்லாமல் இருப்பதால், இந்நிலையில் பேருந்து செலுத்த இயலவில்லை.

சத்துணவு மையம் அமைக்கும் திட்டம்.

299—வினா எண் 12923—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், கம்பளியம்பட்டி ஊராட்சி நிலைப்பட்டி, நிலைப்பட்டிபுதூர் ஆகிய இடங்களில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மேற்குறிப்பிட்ட இடங்களில் புதிதாக சத்துணவு மையங்கள் திறக்க வாய்ப்பு இல்லை.

[குறிபபு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் கையாளப்படும் முறைகளிலுள்ள குறைபாடுகள்.

* திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் (Crop Insurance Scheme) மூலம் விவசாயிகளுக்கு தற்போது ஈட்டுத் தொகை (Compensation) வழங்க பொறுக்காய்வு (Random Check up) என்ற முறையில் மதிப்பீடு செய்வதில் கையாளப்படும் முறைகளில்

உள்ள குறைபாடுகள் குறித்தும், அந்த முறைகள் எளிதாக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும்” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தற்பொழுது தமிழ்நாட்டில் இந்திய அரசு நிர்ணயித்துள்ள வழிமுறைகள் அடிப்படையில், வட்டாரத்தை அடிப்படையாகக் கொண்டு (Area approach) ஒருங்கிணைந்த பயிர் காப்பீட்டுத் திட்டம், நெல், இறவை மற்றும் மானாவாரி சோளம், கம்பு, இராகி, மணிலா, எள் மற்றும் சூரியகாந்தி ஆகிய பயிர்களில் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களுக்கு, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகளின் மூலம் பயிர் கடன் பெறும் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.

அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களின் வட்டார சராசரி விளைச்சல், மத்திய அரசின் தேசீய மாதிரி ஆய்வு நிறுவனம் வகுத்துள்ள வழிமுறைகளை பின்பற்றி மாநில புள்ளி இயல் துறையால், மேற்கொள்ளப்படும் பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு கணிக்கப்பட்ட வட்டார சராசரி விளைச்சல், உறுதி செய்யப்பட்ட வட்டார விளைச்சலை விட (Threshold yield) குறைவாக இருப்பின், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அந்த வட்டார விவசாயிகளுக்கு ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது. ஒரு வட்டாரத்திற்கான உறுதி செய்யப்பட்ட விளைச்சல் விவரம், அந்த வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கணிக்கப்பட்ட குறைந்தபட்சம்

1987 நவம்பர் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முந்தைய (மூன்று) ஆண்டுகளில் சராசரி விளைச்சல்களின் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, மத்திய வேளாண்மைப் புள்ளி இயல் கழகத்தால் கணிக்கப்படுகிறது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலின் அடிப்படையில் அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரத்தில், அறிவிக்கப்பட்ட பயிரில், எட்டு கிராமங்கள் எதேச்சை முறையில் தேர்வு செய்யப் பட்டு, தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் இரண்டு வயல்கள் வீதம் 16 வயல்கள் எதேச்சை முறையில் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் பரிசோதனைக் களங்கள் அமைத்து, 16 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பரிசோதனைகளின் மூலம், கிடைக்கப்பெற்ற விளைச்சல் விவரங்களை அடிப்படை யாகக் கொண்டு வட்டார சராசரி விளைச்சல் கணிக்கப்படுகிறது. இந்த வட்டார சராசரி விளைச்சல் விவரங்கள் பொதுக் காப் பீட்டுக் கழகத்துக்கும் மாநில அரசுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்சராசரி விளைச்சல், ஏற்கனவே உறுதி செய்யப் பட்ட விளைச்சலை விட குறைவாக இருப்பின் கீழ்க்கண்ட முறைப்படி ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது :—

விளைச்சலில் குறைவு

உறுதியளிக்கப்பட்ட விளைச்சல் × ஈட்டுறுதி செய்த தொகை

உறுதியளிக்கப்பட்ட விளைச்சல் — சராசரி விளைச்சல் = விளைச்சலில் குறைவு.

தற்பொழுது பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பின்பற்றப்படும் வழிமுறைகளின்படி பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்காக, எதேச்சை முறையில் தேர்வு செய்யப் படும் கிராமங்களில், அந்த கிராமங்களிலுள்ள அனைத்து விவசாயி களின் வயல்களையும் மாதிரிப் பட்டியலாக எடுத்துக் கொண்டு, (Sampling Frame) அவற்றிலிருந்து இரு வயல்களை எதேச்சை முறையில் தேர்வு செய்து, அவற்றில் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொண்டு, பயிரின் விளைச்சல் விவரம் சேகரித்து, அதன் அடிப்படையில் வட்டார சராசரி விளைச்சல் கணிக்கப்படுகிறது. இம்முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கிராமத்தில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் சேராத விவசாயிகளின் வயல்கள், பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன. இந்த வழிமுறையை மாற்றி, பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், பயிர்

அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்காக, தேர்வு செய்யப்படும் கிராமங்களில், இத்திட்டத்தில் சேர்ந்துள்ள விவசாயிகளை மட்டும் மாதிரிப் பட்டியலாகக் கொண்டு, அப்பட்டியலிலிருந்து, எதேச்சை முறையில், இரண்டு விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வயல்களில் எதேச்சை முறையில் இரண்டு பரிசோதனைத் திடல்கள் அமைத்து, விளைச்சல் விவரம் சேகரிக்கப்பட உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள இந்த நடைமுறைப்படி மாநில புள்ளியியல் துறைதான் வயல்களைத் தேர்வு செய்து, அதிலே பயிர் அறுவடை பரிசோதனைகளை—கிராப் கட்டிங் எக்ஸ்பரிமெண்டைச் செய்து வருகிறது. அப்படி மாநில புள்ளி இயல் துறையானது இந்தப் பரிசோதனைகளைச் செய்கிறபொழுது அங்கேயிருக்கிற அந்த ஃபைனான்சிங் பேங்குகளுக்கு இதைத் தெரியப்படுத்தி அதன் உதவியோடு வயல்களைத் தேர்ந்து எடுப்பதோ அல்லது இந்தப் பரிசோதனைகளை நடத்துவதோ இல்லை என்பதுதான் இப்பொழுதுள்ள குறைபாடு. அந்தக் குறைபாட்டைப் போக்குகின்ற வகையில், தற்போதுள்ள நடைமுறையில் சிறு மாற்றங்களைச் செய்து—அதை மாற்றம் என்று கூட நான் சொல்ல மாட்டேன்—துறைகளுக்கிடையே ஒரு கோவார்டினேஷன் (Co-ordination) வேண்டும் என்பதற்காக அப்படிப் பரிசோதனை செய்கின்றபொழுது இருக்கின்ற அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு பைனான்சிங் பேங்குகளுக்கே இந்த வயல்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகளைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்து, பயிர் அறுவடை பரிசோதனையை மாநில புள்ளி இயல் துறை வேளாண்மைத் துறை உதவியோடு, நம்முடைய பைனான்சிங் பேங்குகளுக்கு அதைத் தெரியப்படுத்தி, அவர்கள் தேர்வு செய்கிற அந்த அடிப்படையில் இந்த முறைகளை மாற்றுவது பற்றிப் பரிசீலிப்பதற்கு மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் துறையை அறிவுறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் ஓரளவுக்கு இருக்கின்ற சூழ்நிலைகள் எடுத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. அவ்வப்பொழுது ஏற்படுகின்ற கஷ்டங்களையும்

1987 நவம்பர் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றவைகளையும் தீர்ப்பதற்கு அவ்வப்பொழுது சில பல மாற்றங்களும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அதிலே ஏதாவது இடர்ப்பாடுகள் இருந்து அந்த இடர்ப்பாடுகளை நிவர்த்திக்க வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் நோக்கத்திலே மாறுபாடு ஏற்படாது, குறைபாடு ஏற்படாது; மாற்றங்கள் எளிமையையும் முழுமையையும் ஏற்படுத்துவதற்குப் பயன்படும் என்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற இந்த ஆலோசனையை ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கைகளை முறைப்படி எடுக்கலாம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த விளக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல தற்போது ஏழு பயிர் வகைகளுக்கு மட்டுமே பயிர் காப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய அரசில் இன்னும் கூடுதலாக பணப் பயிர்களுக்கும், இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை நீட்டிக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியின் பேரில்தான் இவற்றை நீட்ட வேண்டும். ஏற்கனவே இரண்டு, மூன்று பயிர் வகைகளுக்குத்தான் இருந்தது. அண்மையிலே மத்திய அரசினிடத்திலே கேட்டு, அதனுடைய அனுமதியைப் பெற்று, ஜி.ஐ.சி. யினுடைய அனுமதியையும் பெற்று, நாம் பெறுகின்ற அத்தகைய சூழ்நிலையைப் பெற்றோம். வேறு என்னென்ன பயிர்கள் என்று வேளாண்மைத் துறை கூறுகின்றதோ அதை மத்திய அரசுக்கு எழுதி, மத்திய அரசு இணைத்துக் கொள்ளும்படி பணிக்குமேயானாலும் அல்லது வேறு பல மாநிலங்களிலே இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டியும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.